**OS**.**No**. 250/2017

**DW**1- கோவிந்தராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 10.03.2023

பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 9 எனக்கு எதிராகவும் 1ம் பிரதிவாதிக்கு எதிராகவும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 361/14 என்றால் ஆமாம். அதில் பாரா 12ல் நானும் என்னுடைய மனைவியும் துன்புறுத்தியதாலும் மிரட்டியதாலும் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து இந்த வழக்கில் 1ம் வாதி வெளியேறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு உள்ளது ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. வழக்கிற்கு பின்னிட்டு தினமலர் நாளிதழில் 10.12.2014 ல் பொது அறிவிப்பில் 1-2 பிரதிவாதிகள் 1ம் வாதியை கம்பெனியில் இருந்து வெளியேற்ற முயற்ச்சி செய்ததால் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 361/2014 வழக்கை தாக்கல் செய்துள்ளதாக 1ம் வாதி பொது அறிவிப்பில் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பில் 3ம் பிரதிவாதி நிறுவன வாடிக்கையாளருக்கு 1-2 பிரதிவாதிகளுடன் எவ்வித வியாபார தொடர்பும் வைத்துக்கொள்ளவேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த பொது அறிவிப்பை பற்றி எனக்கு தெரியும் என்றால் ஆமாம்.

2. இந்த வழக்கில் தாககல் செய்யப்பட்டுள்ள பதில் உரையில் பாரா 21ல் அக்கடமிக் இயர் 2012-13 என்பது அசஸ்மெண்ட் இயரை குறிப்பதாக உள்ளது என்றால் சரியல்ல. 1 ம் வாதி 31.3.2013 வரை வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளார். 2012-13 அசஸ்மெண்ட் இயர் என்பது 1.4.2011 முதல் 31.3.2012 நிதிஆண்டுக்கானது என்றால் சரியல்ல. 2012-13 அசஸ்மெண்ட் இயர் பின்னிட்டு 1ம் வாதி நிறுவனத்திற்கு வருவதை கொஞ்சம்கொஞ்சம் நிறுத்தி விட்டார் எனவும் 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தை 2014 முதல் நாங்கள்(1-2 பிரதிவாதிகள்) தான் கவனித்து வந்ததாக சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 5 ல் நான் திருப்பூர் தெற்கு

காவல் நிலையத்தில் கொடுத்த புகார் என்றால் நான் கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 6 திருப்பூர் மாவட்ட காவல் ஆணையாளருக்கு நான் கொடுத்த புகார் என்றால் நான் கொடுக்கவில்லை.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்ட்ட ஐ ஏ 4/22 ல் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி கேட்டதில் வா.த.சா.ஆ 5 மற்றும் வா.த.சா.ஆ 6 அடங்கும் என்றால் ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ 5 மற்றும் வா.த.சா.ஆ 6 ன் கீழ் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ 6 ன் கீழான புகார் திருப்பூர் மாவட்ட காவல் ஆணையாளருக்கு கொடுத்து திருப்பூர் மாநகர குற்றபிரிவுக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ 6 ன் கீழான புகார் ஆனது திருப்பூர் மாநகர குற்றபிரிவில் சி.எண் 68/சிசிபி/டிபிசி/2014 நாள் 26.3.2014 என்னும் எண்ணில் கோப்பில் எடுத்து விசாரிக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 4–5 முறை விசாரித்தார்கள் மேற்படி எண்ணுக்கு தான் விசாரித்தார்களா என்பது தெரியவில்லை. 8.4.2014 தேதிய விசாரணை அறிக்கையில் சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதால் தகுந்த நீதிமன்றத்தில் நிர்வாரணம் கோர அறிவுறுத்தப்பட்டு முடிக்கப்பட்டது என்றால் எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. 27.3.2014 ல் திருப்பூர் மாநகர குற்றபிரிவு விசாரணை அதிகாரிக்கு வழக்கறிஞரை கலந்து கொண்டு விளக்கம் கொடுப்பதாக கடிதம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். 4–5 புகார் கொடுத்து இருந்தேன். அதில் ஒரு புகாரின் கீழான விசாரணைக்கு மட்டும் அவ்வாறு சொல்லியிருந்தேன்.

4. நான் வாதிகளுக்கு எதிராக எத்தனை புகார் கொடுத்தேன் என்றால் 3 புகார்கள் கொடுத்துள்ளேன். எண்ணிக்கை சரியாக ஞாபகம் இல்லை. நான் கொடுத்த ஒரு புகாரில் நான் பழனிசாமி மற்றும் கனேஷ் ஆகியோரிடம் ரூ15 லட்சம் வாங்கிக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் என்னுடைய புகாரில் பழனிசாமி மற்றும் கனேஷ் ஆகியோரிடம் ரூ15 லட்சம் வாங்கிக்கொண்டதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ 6 ன் கீழான புகாரானது திருப்பூர் காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் சிஎண் 234 நாள் 24.3.2014 ல் பதிவாகி விசாரணைக்காக திருப்பூர் மாவட்ட குற்றவியல் பிரிவுக்கு அனுப்பட்டதில் சி.எண் 68/சிசிபி/டிபிசி/2014 நாள்

26.3.2014 என்னும் எண்ணில் கோப்பில் எடுத்து விசாரிக்கப்பட்டது என்றால் குறிப்பாக மேற்படி புகார் தானா என்பது ஞாபகம் இல்லை.

5. நான் 2008 ல் 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனம் முதன் முதலில் ஓரியண்டல் பாங் ஆப் காமர்ஸ் என்ற வங்கியில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். ஸ்டேட் பாங் ஆப் இந்தியா ஓவசீஸ் கிளையிலும் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2009 ல் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்டேட் பாங் ஆப் இந்தியா லட்சுமி நகர் கிளையில் எங்களுக்கு தெரியாமல் ஆரமிக்கப்பட்டது. ஸ்டேட் பாங் ஆப் இந்தியா ஓவசீஸ் கிளையில் 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்திற்கு ரூ30 லட்சம் Cash Credit Sanction சொல்லியுள்ளது பொய்யானது என்றால் ஞாபகம்இல்லை . மேற்படி வங்கியில் ரூ20 லட்சம் மட்டுமே Cash Credit Sanction ஆனது என்றால் அது வாதிக்கு தான் தெரியும். மேற்படி மூன்று வங்கிகளிலும் 3ம் பிரதிவாதி நிறுவன பெயரில் தான் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். ஸ்டேட் பாங் ஆப் இந்தியா லட்சுமி நகர் கிளையில் வங்கிக்கணக்கு ஆரமிக்கப்பட்ட விவரம் 2014 ல் தெரியவந்தது. திருப்பூர் மாநகல் குற்றபிரிவில் புகார் அளிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது தான் தெரியவந்தது.

6. கூட்டாண்மை ஒப்பந்த படி வா.த.சா,ஆ1ல் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதி சேர்ந்து தான் வங்கிக் கணக்கு ஆரமிக்க முடியும் என்றாலும் வங்கிக்கணக்கில் இருந்து கூட்டாக கையொப்பம் செய்தால் மட்டுமே காசோலை மூலம் பணம் பெற முடியும் என்றால் ஞாபகம் இல்லை. முன்னரே பல காசோலையில் கையொப்பம் செய்து வைத்து இருந்தார். 1ம் பிரதிவாதி முன்னரே வெற்று காகிதங்களிலும் வெற்று காசோலைகளிலும் கையொப்பம் இட்டு கொடுத்தேன் என்பது குறித்து இந்த வழக்கில் பதில் உரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி விவரம் குறித்து காவல் நிலையதில் புகார் ஏதாவது அளித்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் கொடுத்ததாக கூறும் மூன்றுக்கு மேல்பட்ட புகாரில் 20.12.2013 ல் காலை 11 மணியளவில் நான் கணக்கு வழக்குகளை கேட்ட காரணத்தினால் லாரி ஏற்று கொன்று விடுவதாக வாதிகள் மிரட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

7. நான் வாதிகளுக்கு எதிராக கொடுத்த புகார் 2 தான் என்றால் சரியல்ல. 4 புகார் கொடுத்துள்ளேன். என்னுடைய மனைவி 2 புகார் நான் 2 புகார் அளித்துள்ளேன்.

நான் காவல் நிலையத்தில் கொடுத்த இரண்டாவது புகாரில் முதல் புகார் எப்போது கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நாங்கள் கொடுத்த ஒரு புகாரில் கடந்த 6 மாதங்களாக 3ம் பிரதிவாதி நிறுவனத்தை நிர்வகித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக ரூ97 லட்சம் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா வங்கியில் கடனாக பெறப்பட்டது என்றால் லோகநாதன் தான் பார்த்து வந்தார். மேற்படி கடனானது 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக இயந்திரங்கள் வாங்குவதற்காக தான் பயன்படுத்தப்பட்டது என்றால் ஆமாம்.

8. மேற்படி கடனை திருப்பி செலுத்ததா காரணத்தினால் வங்கி நிர்வாகம் கோவை கடன் வசூல் தீர்ப்பாயத்தில் ஓ ஏஎண் 195/16 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்தது என்றால் ஆமாம். மேற்படி வங்கியின் நடவடிக்கை நிறுத்த கோரி இடை நிலை மனு எண் 1542/2016 தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படுவது மேற்படி மனுவில் என் மனைவி தாக்கல செய்த பிரமாண பத்திரிக்கை என்றால் ஆமாம். மேற்படி மனுவில் 2வது எதிர் மனுதாரராக காட்டப்பட்டுள்ள நிறுவனம் தான் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி நிறுவனம் என்றால் ஆமாம். மேற்படி மனுவில் பாரா 10 ல் எனது மனைவி தனக்கு 2 வது எதிர் மனுதாரர் கூட்டாண்மை நிறுவனத்தில் 50 விழுக்காடு பங்கு உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் ஆமாம்.

9. பொதுவாக கூட்டாண்மை நிறுவனதிலிருந்து ஒரு பங்குதாரர் விலகுவதாக இருந்தால் அது குறித்து மற்ற பங்குதாரருக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டும் என்றாலும் மற்ற பங்குதாரர்களால் கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானம் நடத்தப்படவேண்டும் என்றாலும் அந்த தீர்மானத்தின் நகல் விலகிய பங்குதாரர்களுக்கும்/விலக்கப்பட்ட பங்குதாரருக்கும் வழங்கப்பட வேண்டும் என்றால் அது பற்றி தெரியவில்லலை.கூட்டாண்மை ஒப்பந்த பத்திரதில் Partnership At Will என தான் குறிபிடப்பட்டுள்ளது எனவே விலகுவது குறித்து கடிதம் அளித்தால் மட்டுமே போதுமானது. 1ம் வாதி 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனதிலிருந்து விலகுவதாக 2ம் பிரதிவாதிக்கு எந்த சமயத்திலும் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் எங்களுக்கு அளித்துள்ளார். அவ்வாறு 1ம் வாதி 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனதிலிருந்து விலகியதாக நாங்கள் எடுத்துக்கொண்டது குறித்து நிறுவன பதிவாளருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. இருவர்

பங்குதாரர்களாக உள்ள கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து ஒரு பங்குதாரர் விலகினால் தினசரி பயன்படுத்தப்படும் நாளிதழில் அது குறித்தும் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்பட்டது குறித்தும் பொது அறிவிப்பு வழங்கப்பட வேண்டும என்றால் அது பற்றி தெரியவில்லை. அவ்வாறு பொது அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

10. 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனம் 1.4.2012 முதல் எங்களுடைய கட்டுப்பாட்டில் தான் இருந்தது என்றாலும் நானும் என்னுடைய மனைவியும் தான் நிர்வகித்து வந்தோம் என்றாலும் சரியல்ல. டிசம்பர் 2012 ல் தான் நாங்கள் பொறுப்பில் எடுத்தோம். நான் 13.5.2012 கோவிந்தராஜ் அன்கோ என்ற பெயரில் ஒரு தனிநபர் நிறுவனம் ஆரபித்தேன் என்றால் அதை 2ம் வாதி தான் ஆரபித்தார். எங்கள் நிலையான முகவரி 4/119 கலா கார்டன் சத்தியா நாராயணபுரம் சிந்தாமணி புதூர் கோவை என்றால் சரிதான். எந்த வருடதலிருந்து மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறோம் என்றால் 2011 அல்லது 2012.ஞாபகம் இல்லை. 8.1.2014 ல் மேற்படி விலாசத்தை அலுவலக முகவரியாக குறிப்பிட்டு என்னுடைய மனைவி இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி நிறுவன பெயரில் ஒரு தனிநபர் நிறுவனத்தை ஆரம்பித்தார் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.